## பாடம் 06

# நல்லதொரு நாள்

பாடசாலை விடுமுறைக் காலம். ஒரு நாள் காலை சாந்தியும் நிமாலும் தமது தாயுடன் சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது தபாற்காரன் மணி அடிக்கும் ஓசை கேட்டது. உடனே நிமல் ஓடிச் சென்று தனது பெயரில் வந்திருந்த கடிதத்தைப் பெற்றுக் கொண்டான். அம்மா எனக்கொரு கடிதம் வந்திருக்கிறது என்று மகிழ்ச்சி பொங்கச் சத்தமாகச் சொன்னான் சாந்தி "அண்ணா கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது" என்று கேட்டாள்.

ஆ..... என்னுடன் படிக்கும் ரவி அனுப்பியிருக்கிறான். என்று நிமல் கூறினான்.

நல்லது மகனே எங்களுக்கும் கேட்கும்படி கடிதத்தைச் சத்தமாக வாசியும் பார்க்கலாம் என்று அம்மா சொன்னாள்.


நிமல் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினான்.

*இரத்தினபுரி,*
*2000.10.15.*

**இறை ஆசிகள்.**
***என் அன்பு மிக்க நிமலுக்கு!***

இது விடுமுறைக் காலமானபடியால் நீரும் தங்கச்சியும் சேர்ந்து விளையாடி மகிழ்வீர்கள் என்று நினைக்கிறேன். விடுமுறைக்கு முன் நம்முடைய ஆசிரியர் ஒரு ஒப்படை தந்தாரல்லவா? அதைச் செய்து முடித்துவிட்டீரா. நான் இன்னும் செய்யவில்லை எனக்கு அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

இன்னும் உமக்குச் சொல்லுவதற்கு ஒரு முக்கியமான செய்தி இருக்கிறது. கடந்த மாதம் அம்மாவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது, என்று சொன்னேன் ஞாபகமிருக்கிறதா? அந்தச் சின்னத் தம்பிக்குக் கடந்த ஞாயிற்றுக் கிழமை திருமுழுக்குக் கொடுத்துப் புதுப் பெயர் வைக்கப்பட்டது. தயாளன் அன்ரனி, என்பதே அப்பெயர்



அன்று ஞாயிற்றுக் கிழமை காலை நாங்கள் கோயிலுக்குச் செல்ல ஆயத்தமானோம். அம்மா சின்னத் தம்பிக்கு அழகான வெள்ளைச் சட்டை ஒன்றை உடுத்தினாள். அப்பாவும் அம்மாவும் நானும் தங்கை லீலாவும் அழகாக உடுத்திக் கொண்டு எங்கள் பெரிய மாமா மாமியோடு அவர்களுடைய மோட்டார் வண்டியில் ஆலயத்திற்குப் போனோம். தம்பியின் ஞானத் தாய், தந்தை ஆகியோர் அங்கே வந்திருந்தார்கள்.

அருட்தந்தை எங்கள் அப்பாவை அழைத்து ஞானத் தாய், ஞானத் தந்தை, குழந்தை ஆகியோரின் பெயர்களைக் கேட்டார். மேலும் சில விபரங்களையும் கேட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்ட பின்னர் நாங்கள் கோயிலுக்குள் திருமுழுக்குக் கொடுக்கும் இடத்திற்குப் போனோம்.

பின்னர் அருட்தந்தை வந்து செபத்துடன் திருமுழுக்குச் சடங்கை ஆரம்பித்தார். இறை வார்த்தையில் ஒருபகுதியை வாசித்து விளக்கம் கொடுத்தார். அவர் என்ன சொன்னார் என்பது எனக்கு இன்றும் ஞாபகமிருக்கிறது.

இந்தக் குழந்தை இறைவனின் கொடையாகும். இங்கே இருக்கின்ற நீங்கள் அனைவரும் இந்தக் குழந்தையை இயேசுவிடம் அழைத்துச் செல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இயேசு காட்டிய வழியிற் செல்லுவதற்கு அவனுக்கு உதவி செய்ய வேண்டும். அந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டபடியால் இந்தக் குழந்தைக்கு நான் திருமுழுக்குக் கொடுக்கிறேன்.

பின்னர் அருட்தந்தை அவர்கள் சூழ்ந்திருந்த முதியவர்களிடம் மெழுகுதிரிகளைப் பற்ற வைத்துக் கொண்டு திருமுழுக்கு வார்த்தைப் பாடு கொடுக்குமாறு கூறினார்.

அதன்பின், அருட்தந்தை தம்பியின் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைந்து பரிசுத்த தைலத்தினால் அபிசேகம் செய்தார். அதன் பிறகு அவர் தம்பியின் தலையில் மூன்று முறை தண்ணீரை ஊற்றிக் கொண்டே

தயாளன் அன்ரனி பிதாவுடையவும் சுதனுடையவும் தூயாவியுடையவும் பெயராலே நான் உன்னைக் கழுவுகிறேன் என்று கூறினார். பின்னர் செபம் சொல்லி; ஒரு பாடல் பாடித் திருச் சடங்கை முடித்தார். நான் அருட்தந்தை சொல்லுவது செய்வது ஆகிய எல்லாவற்றையும் மிகவும் கவனமாகக் கேட்டேன். பார்த்தேன். எங்களுடைய ஆசிரியை திருமுழுக்குப் பற்றிச் சொல்லித் தந்த விடயங்கள் யாவும் நன்றாக விளங்கின. நானும் தம்பியைப் பாதுகாத்துத் தரும்படி இறைத் தந்தையிடம் வேண்டிக் கொண்டேன். இந்தச் சடங்கில் நீங்களும் கலந்து கொண்டிருந்தால் எவ்வளவு நலமாக இருந்திருக்கும்?

பாடசாலை தொடங்கிய பின்னர் தம்பியின் திருமுழுக்கின் போது எடுத்த புகைப்படங்களைக் கொண்டு வந்து காட்டுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் மரியன்னையின் ஆசி கூறி விடை பெறுகிறேன். நன்றி,

இங்ஙனம்,
அன்புள்ள நண்பன்,
ரவி.

கடிதத்தை வாசித்து முடித்ததும் எல்லோருக்கும் சரியான மகிழ்ச்சியாக இருந்தது. இன்றிரவு நாம் அந்தத் தயாளன் அன்ரனிக்காகச் செபிப்போம் என்று அம்மா சொன்னார். இறை தந்தைக்கு நன்றி கூறுவோம்.

**ஒப்படை :**

1. திருமுழுக்கு வழங்கும் போது அருட்தந்தை கூறும் வசனங்கள் எவை? அவற்றைப் பயிற்சிக் கொப்பியில் எழுதுக.

2. நீர் திருமுழுக்குப் பெறும் போது எடுத்த புகைப்படம் ஒன்று இருப்பின் அதை உமது அப்பியாசக் கொப்பியில் ஒட்டுக.

**பின்னர்**

கீழ்வரும் முறையில் உமது கிறிஸ்தவ அடையாள அட்டையைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

1. உங்கள் பெயர் :
2. உங்களுடைய பிறந்த திகதி :
3. நீங்கள் திருமுழுக்குப் பெற்ற திகதி :
4. உங்களுடைய பெற்றோரின் பெயர் :
5. உங்களுடைய ஞான பெற்றோரின் பெயர்:
6. நீங்கள் திருமுழுக்குப் பெற்ற ஆலயத்தின் பெயர்:
7. உங்களுக்குத் திருமுழுக்குத் தந்த அருட்தந்தையின் பெயர்: